மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

16.09.2022 வெள்ளிக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# சர்வதேச சமூகமே நேரத்தை வீணடிக்காதீர்: தமிழர் தரப்பு



இலங்கையில் இடம்பெற்ற போர் குற்றங்கள் குறித்து உள்ளக விசாரணைகள் மீதோ அல்லது உள்ளக பொறிமுறைகள் மீதோ எமக்கு எந்த நம்பிக்கையும் இல்லை, போர் குற்றத்தில் ஈடுபட்ட அனைத்து குற்றவாளிகளும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும் என காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க செயலாளர் ஆ.லீலாதேவி ஜெனிவாவில் தெரிவித்துள்ளார். சர்வதேச தரப்பு இனியும் நேரத்தை வீணடிக்க வேண்டாம் என சர்வதேச சமூகத்திற்கு அழைப்பு விடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இறுதி யுத்தத்தில் பாதுகாப்பு தரப்பிடம் ஒப்படைக்கப்பட்ட தமது பிள்ளைகள், உறவுகள் குறித்து அவர்கள் இன்னமும் எதிர்பார்ப்புடன் உள்ளனர். அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். அவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். தமது வாழ்க்கையின் இறுதிக்கட்டத்தில் தமக்கான நாட்களை எண்ணிக்கொண்டுள்ள பெற்றோருக்கு செய்யக்கூடியது இதுவே எனவும் அவர் தெரிவித்துள்ளார். 02



வெருகலம்பதி சித்திரவேலாயுதர் சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தின் தீர்தோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை (16) பக்த அடியவர்களின் அரோகரா கோஷத்துடன் மகாவலி கங்கையின் கிளையாறான வெருகல் கங்கையில் இடம்பெற்ற போது...

## லண்டன் செல்கிறார் ரணில்

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை (17) ஐக்கிய இராச்சியத்திற்கு (UK) செல்லவுள்ளார். சனிக்கிழமை அதிகாலை இலங்கையிலிருந்து புறப்படும் ஜனாதிபதி, திங்கட்கிழமை (19) லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் மண்டபத்தில் நடைபெறும் இறுதிச் சடங்குகளில் பங்கேற்கவுள்ளார்.

# முன்னாள் ஜனாதிபதியை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எதிர்வரும் ஒக்டோபர் 14ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் இன்று (16) அழைப்பாணை வெளியிட்டுள்ளது. அருட்தந்தை சிறில் காமினி மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட ஏசுதாசன் நடேசன் ஆகியோர் தாக்கல் செய்த தனிப்பட்ட மனுவினை பரிசீலித்த கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு அன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்கத் தவறியமை மற்றும் கவனக்குறைவு தொடர்பான தனிப்பட்ட மனுவில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ளார்.

# இறுக்கமான தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்



மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களிலிருந்து இலங்கை அரசும், அதன் படைகளும் தப்பிக்க முடியாதவாறு மிகவும் இறுக்கமான தீர்மானமொன்று ஜெனிவாவில் நிறைவேற்றப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வழங்கியே 02

# அரசியல் கட்சிகளில் உள் ஜனநாயகம் இல்லை இளைஞர்கள் எப்படி ஆட்சியைப் பிடிக்க முடியும்



100 வீதம் முதியோர் பாராளுமன்றத்தினாலோ அல்லது 100 வீதம் இளைஞர் பாராளுமன்றத்தினாலோ நெருக்கடிகளை தீர்க்க முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் திரு மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். இளைஞர்கள் மற்றும் முதியோர்களுக்கு இடையிலான இந்த வேறுபாட்டை நீக்கி இளைஞர்கள் மற்றும் முதியோர்கள் கலந்த ஆட்சியை உருவாக்க வேண்டியது நாட்டின் தேவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரச உத்தியோகத்தர்கள் 60 வயதில் ஓய்வுபெறுவது போன்று அரசியல்வாதிகளுக்கும் ஓய்வுபெறும் வயது அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என மக்கள் மத்தியில் பாரிய அபிப்பிராயம் 02

# நாமல் உள்ளிட்ட மேலும் சிலர் விரைவில் அமைச்சர்களாக பதவியேற்பு

நாட்டில் மேலும் சில அமைச்சரவை அமைச்சர்கள் விரைவில் பதவியேற்பார்கள் என நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். இந்த வாரம் அல்லது அடுத்த வாரத்தில் பதவியேற்பு நிகழ்வு நடைபெறும் என அவர் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கும் அமைச்சுப் பதவி கிடைக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.அரசியலமைப்புக்கு அமைவாக ஜனாதிபதி 30 அமைச்சரவை அமைச்சர்களை நியமிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தஞ்சம் கோரி ஓடிய முன்னாள் ஜனாதிபதி இன்று எமது நாட்டுக்கே வந்துள்ளார்



**பைஷல் இஸ்மாயில் -**

தலைவரை இழந்துவிட்டோம் என்ற துக்க எம்மை வாட்டி வதைத்தாலும், அவரின் அந்த இடத்தை மிக நேர்த்திய முறையில் செய்து வருகிறோம். பெருந்தேசிய கட்சிகளும் அச்சம் கொள்ளும் அளவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும், தலைமையும் தனது பலத்தை நிரூபித்து வருகிறது. நாட்டை சரியான முறையில் நிர்வகிக்க முடியாமல் நாட்டை விட்டு வேறு நாட்டிடம் தஞ்சம் கோரி ஓடிய முன்னாள் ஜனாதிபதி இன்று எமது நாட்டுக்கே வந்துள்ளார். அந்தளவு பல அவமானங்களைச் சந்தித்த ஜனாதிபதியாகவும் அவர் இருந்துள்ளார் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். 02

# மீண்டும் மதகுருவிற்கு விளக்கமறியல்

**பாறுக் ஷிஹான்**

இளம் பிக்குகள் மீதான பாலியல் துஸ்பிரயோகம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட பிரதம பௌத்த மதகுரு தொடர்பிலான பிணை கோரிக்கை மறுக்கப்பட்டு எதிர்வரும் செப்டம்பர் மாதம் 23ஆம் திகதி வரை 07 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஹாரை ஒன்றில் வைத்து 3 இளம் பிக்குகள் பாலியல் துஸ்பிரயோகம் செய்தமை தொடர்பிலான வழக்கு இன்று (16)கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து 02



பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன், வெலிக்கடை மகசின் சிறைச்சாலையில் சாகும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அசியல் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மட்டக்களப்பில் இன்றைய தினம் (16) அடையாள உண்ணாவிரதம் முன்னெடுக்கப்பட்ட போது..



## இறுக்கமான தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்

தீர வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பதில் ஆணையாளர் ஆற்றிய உரையை வரவேற்கின்றோம். அதேவேளை, இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரால் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்த அறிக்கையையும் நாம் வரவேற்கின்றோம்.ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் பரிந்துரைகளை இலங்கை அரசு இதுவரை நிறைவேற்றவில்லை. மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை அரசு தொடர்ந்து உதாசீனம் செய்து வருகின்றது எனக் குறிப்பிட்ட அவர், அரசியல் தீர்வு சம்பந்தமான பரிந்துரையையும் கூட இலங்கை நடைமுறைப்படுத்தவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னமும் அமுலில்தான் இருக்கின்றது. அதன் கீழ் கைது நடவடிக்கைகள் தொடர்கின்றன. ஐ.நா.வுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் இலங்கை அரசு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்த போதிலும் அவற்றில் எதுவும் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

அந்த வாக்குறுதிகளைக் கிடப்பில் போட்டுவிட்டு சர்வதேச சமூகத்தை இதுவரை காலமும் இலங்கை அரசு ஏமாற்றி வந்தது. மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களிலிருந்து இலங்கை அரசும், அதன் படைகளும் தப்பிக்க முடியாதவாறு மிகவும் இறுக்கமான தீர்மானம் இம்முறை ஜெனிவாவில் நிறைவேற்றப்பட வேண்டும். இதற்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வழங்கியே தீர வேண்டும் என்றார்.

## தஞ்சம் கோரி ஓடிய முன்னாள் ஜனாதிபதி

கடந்த 2000 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 ஆம் திகதி ஹெலிஹொப்டர் விபத்தில் அகால மரணமடைந்தார் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரப்பின் 22 வது வருட நினைவு தின நிகழ்வும், விஷேட துஆப் பிரார்த்தனையும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அட்டாளைச்சேனை மத்திய குழுவினரால் இன்று (16) ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பெரும் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் இருந்த காலப்பகுதியில் அட்டாளைச்சேனைக்கு எந்த விதமான அரசியல் தலைமையும் கிடைக்கவில்லை. நான் இருந்த காலப்பகுதியிலேயே பிரதேச சபை தவிசாளர் என்றும், மாகாண சபை உறுப்பினர் என்றும், மாகாண அமைச்சர் என்றும், பாராளுமன்ற உறுப்பினர் என்ற பல பதவிகளை வழங்கியுள்ளேன்.

முஸ்லிம் காங்கிரஸ் என்னும் அரசியல் பேரியக்கம் உருவாக்கப்பட முன்பு முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஒற்றுமையின்றி பிரதேசவாதம் தலைதூக்கி இருந்தது. எதற்கெடுத்தாலும் பிரதேசத்தினை மையமாக கொண்ட அரசியல் கலாசாரம் அன்று இருந்தது. இவ்வாறு பிரதேச ரீதியாக பிளவுபட்டுக் கிடந்த முஸ்லிம் மக்களை ஒன்றிணைப்பது சிரமமான விடயமாகக் காணப்பட்டது. அப்போதுதான் மு.கா என்ற பேரியக்கம் ஆரம்பமானது. மு.கா.வின் வரலாறையும், வந்த தடத்தையும் தடயங்களையும் முற்றாக அழிப்பதென்ற பேரினவாதிகளின் நிகழ்ச்சி நிரலைத் தகர்த்தெறிந்து மீட்பதென்பது இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் பெரும் சவாலாக மாறி வருகிறது.

மர்ஹூம் அஷ்ரப் மூவின சமூகத் தலைவர்களுடனும் நெருங்கிய உறவைப் பேணினார். பெரும்பான்மைக் கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை ஆட்சியின் பங்காளியாக கொண்டு தேசியக் கட்சிகள் ஆட்சி நடத்தின. இவ்வாறு ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாகவும், முஸ்லிம்களின் முகவரிக் கட்சியை மாற்றியமைத்த ஒருவர் மர்/ஹும் அஷ்ரபாகும் என்றார்.

## சர்வதேச சமூகமே நேரத்தை வீணடிக்காதீர்: தமிழர் தரப்பு

இறுதி யுத்தத்தில் 140க்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்கள் காணாமலாக்கப்பட்டுள்ளனர். அவர்களை நாம் இழந்துள்ளோம், இவர்களது உறவினர்கள் இறக்க முன்னர் எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றே நாம் சர்வதேச சமூகத்தை நாடுகிறோம், உண்மைகளை கண்டறிய உள்ளக பொறிமுறை உருவாக்கப்படும் என கூறி பல வருடங்கள் கடந்தும், கலப்பு நீதிமன்றங்களை கூட அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழர் பிரதேசங்களின் சனப்பரம்பலை அழிக்கும் விதமான சிங்கள குடியேற்றங்கள் இடம்பெற்றுக்கொண்டுள்ளன. மறுபுறம் இராணுவ மயமாக்கல் மற்றும் நில அபகரிப்புகள் இன்றுவரை தொடர்கின்றன என்றும் அவர் தெரிவித்தார். ஐநா மனித உரிமைகள் பேரவையில் 'ஆயுத மோதலின் போதும் அதற்குப் பின்னரும் இலங்கையில் தமிழர் உரிமைகளுக்கான சர்வதேச சட்டப் பாதுகாப்பின் தோல்வி' என்ற தலைப்பில் ஜெனிவாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

## அரசியல் கட்சிகளில் உள் ஜனநாயகம் இல்லை..

நிலவுவதாகவும், அவ்வாறு நடந்தால் ஓய்வுபெறும் அரச உத்தியோகத்தர் அரசியலில் நுழையும் வாய்ப்பை இழக்க நேரிடும் எனவும் மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டியுள்ளார். அரசியல் கட்சிகளில் உள்ளக ஜனநாயகமின்மையே இளைஞர்களின் கையில் அதிகாரம் இல்லாததற்கு முக்கிய காரணியாக இருப்பதாகவும், இதுவரை நாட்டை ஆண்ட கட்சிகளின் தலைவர்கள் எல்லையற்ற அதிகாரத்தை பயன்படுத்தி வருவதாகவும் தேசப்பிரிய கூறுகிறார். அத்துடன் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் பதவியை கூட பெறாத கட்சிகள். இவ்வாறான நிலையில் இளைஞர்களின் பிரச்சினைகள், பெண்களின் பிரச்சினைகள் மற்றும் சிறுபான்மை குழுக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஜனநாயக தினத்தை முன்னிட்டு கொழும்பில் நேற்று இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மஹிந்த தேசப்பிரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## மீண்டும் மதகுருவிற்கு விளக்கமறியல்

கொள்ளப்பட்ட நிலையில் சந்தேக நபரான பௌத்த மதகுருவை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார். அம்பாறை மாவட்டம் சடயந்தலாவை பகுதி ஒரு குடும்பத்தை சேர்ந்த 3 இளம் பிக்குகள் கல்முனை பகுதி விஹாரை ஒன்றில் வைத்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாலியல் துஸ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் ஒன்றின் அடிப்படையில் செப்டம்பர் 13 ஆந் திகதி கல்முனை சுபத்ரா ராமய விகாராதிபதியாக ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர் என்றழைக்கப்படும் பிரதான பௌத்த மதகுரு அம்பாறை மாவட்ட சிறுவர் பெண்கள் விசேட பிரிவினரால் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு கல்முனை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார். இதனடிப்படையில் கல்முனை நீதிமன்ற நீதிவான் கைதான சந்தேக நபரை கடந்த செப்டம்பர் மாதம் 16 ஆந் திகதி வரை 3 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் இன்று(16) இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது இரு தரப்பினர் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகளின் நீண்ட நேர சமர்ப்பணங்கள் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டதுடன் பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவ அறிக்கை இதுவரை மன்றிற்கு கிடைக்கப்பெறாமை சம்பவம் தொடர்பிலான விசாரணை பூரணப்படுத்தப்படாமை ஆகியவற்றை கருத்திற் கொண்டு சந்தேக நபரான தேரரின் பிணை கோரிக்கை மறுக்கப்பட்ட நிலையில் மீண்டும் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 23 ஆந் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பவத்தின் பின்னணி

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஹாரை ஒன்றில் புதிதாக இணைந்த 3 இளம் பிக்குகள் திடீர் சுகயீனம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் கடந்த மாதம்(ஆகஸ்ட்) இறுதி பகுதியில் இளம் பிக்குகளின் பெற்றோரினால் அனுமதிக்கப்பட்டிருந்தனர். பின்னர் குறித்த வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கமைய அம்பாறை பொது வைத்தியசாலையில் உள்ள பிக்குகளுக்கான தனியான சிகிச்சை பிரிவிற்கு 3 இளம் பிக்குகளும் வைத்திய பரிசோதனைக்காக மாற்றப்பட்டு சட்ட வைத்திய அதிகாரியிடம் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் அம்பாறை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 3 இளம் பிக்குகளும் தாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் தலைமை பௌத்த துறவியினால் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு ஆளாகிதாக குறிப்பிட்டிருந்தனர். இதனை அடுத்து குறித்த 3 இளம் பிக்குகளும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகி இருப்பதாக சட்ட வைத்திய அதிகாரியும் தனது வைத்திய அறிக்கை ஊடாக அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு குறிப்பிட்டிருந்தார்.

இதனை அடுத்து இச்சம்பவம் தொடர்பில் மருத்துவ அறிக்கை பிரகாரம் செப்டம்பர் 01 ஆம் திகதி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்பின் பேரில் மாவட்ட சிறுவர் பெண்கள் விசாரணைப் பிரிவினர் வைத்தியசாலைக்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். இதன் பின்னர் குறித்த சம்பவ விசாரணை அறிக்கை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அறிவுறுத்தலின் பிரகாரம் கடந்த செப்டம்பர் 05 ஆந் திகதி கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பட்டு சட்ட நடவடிக்கைக்காக தயார் படுத்தபட்டிருந்தது. இதற்கமைய 3 இளம் பிக்குகள் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகியதாக குற்றஞ்சாட்டப்பட்ட பிரதான சந்தேக நபராக கருதப்படும் பௌத்த மதகுரு தொடர்பில் கடந்த செப்டம்பர் மாதம் 13 ஆந் திகதி கல்முனை நீதிவான் நீதிமன்றத்திற்கு அம்பாறை மாவட்ட சிறுவர் பெண்கள் விசாரணைப் பிரிவினர் அறிக்கை சமர்ப்பித்திருந்த நிலையில் பௌத்த மதகுரு செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அத்துடன் இன்று மீண்டும் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

மேலும் இச்சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட இளம் பிக்குகளின் பெற்றோர் ஏற்கனவே வழங்கிய முறைப்பாட்டிற்கமைய அம்பாறை பகுதியில் இருந்து வருகை தந்த விசேட பொலிஸார் இன்று கல்முனை பகுதியில் உள்ள குறித்த பௌத்த விஹாரைக்கு சென்று விசாரணை மேற்கொண்டதுடன் சந்தேக நபரான பிரதான பௌத்த மதகுருவிடம் வாக்குமூலங்களை பொலிஸார் பெற்று கைது செய்திருந்தனர். மேலும் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளான சகோதரர்களான 08 , 13 , 14 வயது மதிக்கத்தக்க 3 இளம் பிக்குகளும் ஏற்கனவே அம்பாறை புறநகர் பகுதி ஒன்றியில் இருந்து துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் அண்மையில் கல்முனை பகுதியில் உள்ள பௌத்த விஹாரைக்கு புதிதாக இணைக்கப்பட்டிருந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# திலீபன் இன்னும் தாகத்துடன்தான் இருக்கின்றார் - சுரேஸ்



(ரக்ஸனா)

திலீபன் இன்னும் தாகத்துடன்தான் இருக்கின்றார். பாரத தேசம் அவருடைய உயிர் பறிபோவதற்குக் காரணமாக இருந்தது. இன்னும் பாரத தேசம் இலங்கைத் தீவிலிருக்கின்ற தமிழர்களின் கோரிக்கையை மதிக்காமலுள்ளது. என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஸ் தெரிவித்துள்ளார். உண்ணா நோம்பிருந்து உயிர் நீத்த தியாக தீபம் திலீபன் அவர்களின் உருவப்படம் தாங்கிய ஊர்தியின் இரண்டாம் நாள் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடியில் வைத்து வெள்ளிக்கிழமை(16) ஆரம்பமாகியது. இதன்போது கலந்து கொண்டு அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இதன்போது திலீகனின் உருவப் படத்திற்கு மக்கள் மலரஞ்சலி செலுத்தி, ஈகைச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இதில் தமிழ் தேசியக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உள்ளிட்ட பலரும் இணைந்திருந்தனர்.

இதில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த சுரேஸ், இந்திய இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்கு எதிராக தியக தீபம் திலீபன் அவர்களது உண்ணா விரதப்போராட்டம் நல்லூரிலே 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் திகதி 5 அம்சக்கோரிக்கைகளுடன் உண்ணா நோம்பிருந்து, 12 நாட்கள் ஒரு துளி நீர்கூட அருந்தாது தனது உடலை கொஞ்சம் கொஞ்சமாக உருக்கி தன்னுடைய உயிரை அற்பணித்தார். அக்காலத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கிழ் இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு தமிழர்கள் வடக்கு கிழக்கு பூராகவும், துன்புற்றிருந்த வேளையிலும், இனத்திற்காக அவர் உயிர் நீத்துள்ளார்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் தமிழர்களுடைய அபிலாசை என்பது 13வது திருத்த்திற்கேள்ளே முடக்கப்பட்டு, ஒற்றையாட்சிக்குள் முடக்கப்பட்டுள்ள வேளையிலே அதற்கு எதிராக தமிழ் மக்களுடைய தேசம் அங்கீகரிக்கப்படல் வேண்டும், தமிழர்கள் நிம்மதியாக வாழவேண்டும். கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படல் வேண்டும், சிங்கள பௌத்த மயமாக்கல் அகற்றப்படல் வேண்டும், தமிழர் தயாகத்திலிருந்து காவல்துறையினர் வெளியேற வேண்டும், போன்ற அடிப்படிக் கோரிக்கைகளை முன் வைத்து அவருடைய உண்ணாநோம்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இன்னும் அவருடைய கோரிக்கைக்கு தீர்வு கிடைக்கவில்லை.

திலீபன் இன்னும் தாகத்துடன்தான் இருக்கின்றார். பாரத தேசம் அவருடைய உயிர் பறிபோவதற்குக் காரணமாக இருந்தது. இன்னும் பாரத தேசம் இலங்கைத் தீவிலிருக்கின்ற தமிழர்களின் கோரிக்கையை மதிக்காமலுள்ளது. இங்குள்ள சிலர் 13வது திருத்தத்தை ஆதிக்கின்றனர், நாம் அதனை எதிர்க்கின்போது, அரசியலுக்காக எதிர்க்கின்றோம் என எம்மீது சிலர் சேறு பூசை முனைகின்றார்கள். எனவே திலீபனது கோரிக்கைகள் நிறைவேறும்வரை இகையில் தமிழர்கள் நிம்மதியாக வாழ முடியாமல் இருக்கின்றது. மக்கள் புரட்சி வெடிக்க வேண்டும், தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்படல் வேண்டும், அதற்காக திலீபனுடைய பாதையில் நாங்கள் தொடர்ந்து பயணிப்போம் என அவர் இதன்போது தெரிவித்தார்.

# கதிரவெளியில் ஆயுதங்கள் மீட்பு




(ந.குகதர்சன்)

வாகரை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கதிரவெளி பால்சேனை பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் இன்று வெள்ளிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர். இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற உத்தரவுக்கமைய வாகரை பொலிஸாரின் உதவியுடன் குறித்த பிரதேசத்தில் ஆயுதங்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கை அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

200 ஜி.பி.எம்.ஜி. ரவைக்கோர்வை, 750 ஜி.பி.எம்.ஜி. தோட்டாக்கள், 50 கலிபர் ரவை, பெராக்குண்டு, 07 ஏ.கே ரவைக்கூடுகள், கைக்குண்டு, கண்ணிவெடி, எறிகணை போன்ற பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான விசாரனைகள் இடம் பெருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# பொத்துவில் பிரதேசத்தில் பழங்களுக்கு இரசாயன திரவியம் பயன்படுத்திய இருவர் கைது



அஸ்ஹர் இப்றாஹிம்

பொத்துவில் பிரதேசத்தில் பொது சுகாதார பரிசோதகர்கள் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துடன் இணைந்து மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது வாழைக்காய்களுக்கு இரசாயன திரவியம் உபயோகித்து அதனை பழுக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டு பொத்துவில் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். பொத்துவில் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.ஸி.றிஸ்வான் சந்தேக நபர்கள் இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் இருவருக்கும் தலா 10,000 ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

அண்மைக்காலமாக பொத்துவில் பிரதேசத்தில் பழங்களை பழுக்க வைப்பதற்காக இரசாயன திரவியம் பயன்படுத்தப்பட்டு வருதாகவும் இதனால் அவ்வாறான மருந்து தெளிக்கப்பட்ட பழங்களை உண்பதால் பக்க விளைவுகளான வயிற்றுவலி , வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் ஏற்படுவதாகவும் பொது மக்கள் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு வழங்கிய முறைப்பாடுகளின் அடிப்படையிலையே இவ்வாறு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகவும் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சிரேஸ்ட பொது சுகாதார பரிசோதகர்கள் எம்.எஸ்.எம்.மலீக் தெரிவித்தார்.

இந்த திடீர் பரிசோதனையின் போது பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் .ஏ.யு.அப்துல் சமட் , பொது சுகாதார பரிசோதகர்களான எம். பைரூஸ் , எம்.ஐ.அர்ஸாத், எம்.ஏ எல்.ஏ.பாரி , முஹம்மட் சர்ஜ/ன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொத்துவில் மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஏ.ஸி.றிஸ்வான் சந்தேக நபர்களுக்கு எச்சரிக்கை விடுத்து தண்டப்பணத்தை செலுத்துமாறு உத்தரவிட்டார்.

# அசியல் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவு மட்டக்களப்பில் அடையாள உண்ணாவிரதம்



பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன், வெலிக்கடை மகசின் சிறைச்சாலையில் சாகும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அசியல் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மட்டக்களப்பில் இன்றைய தினம் (16) அடையாள உண்ணாவிரதம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு காந்திப் பூங்கா அருகில் நடைபெற்ற இவ் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இரா. சாணக்கியா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கி.துரைராசசிங்கம், பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், மாநகர மற்றும் பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், எனப் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்குதல், அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

# இன்று வினாயகபுரத்தில் 47வது நூறுநாள் உரிமை போராட்டம்




**(வி.ரி. சகாதேவராஜா)**

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற நூறு நாட்கள் செயல்முனைவின் ஓரங்கமாக இன்று (16) வெள்ளிக்கிழமை திருக்கோவில் வினாயகபுரத்தில் 47 வது நூறுநாள் உரிமை போராட்டம் நடைபெற்றது. இதன் கருப்பொருள் "கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" என்பதாகும். அம்பாரை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் வினாயகபுர பிரதேசத்தில் பவனியாக வருகை தந்த மக்கள் இவ்வாறான கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தார்கள். அந்த அடிப்படையில், மக்கள் ஒன்றிணைந்து தங்களுக்கான வாழ்வியல் உரிமையை கேட்கின்ற நிகழ்வாக இந்த நிகழ்வு நூறு நாள் செயல்முனைவின் 47நாளான இன்று அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்றது. சுமார் 200க்கும் மேற்பட்ட பெண்கள் அமைப்புகளை சேர்ந்தவர்கள், கிராம அபிவிருத்தி சங்கங்களை சேர்ந்தவர்கள் ,விவசாய அமைப்புகளை சேர்ந்தவர்கள், இளைஞர் விளையாட்டுக் கழகத்தினர் என பலரும் கலந்து சிறப்பித்தனர்

# தியாக தீபம் திலீபனின் உருவப்படம் தாங்கிய வாகனப் பேரணி கல்முனையில்





**(காரைதீவு நிருபர் சகா)**

தியாகதீபம்திலீபனின்நினைவுவாரத்தைமுன்னிட்டுபொத்துவிலில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிய அவருடைய திருவுருவப்படம் தாங்கிய வாகன பேரணி நேற்று(15) கல்முனை பிரதேசத்தை வந்தடைந்தது. நேற்று மாலை பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலுக்கு சென்றபோது மக்கள் அஞ்சலி செலுத்தினர். தியாக தீபம் திலீபனின் 35வது நினைவேந்தலை முன்னிட்டு அவர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த நேற்றுமுன்தினத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் பொத்துவில் தொடக்கம் நல்லூர் வரையான திலீபன் நினைவு ஊர்திப் பயணம் பொத்துவில்லில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படும் இவ்வூர்திப் பவணி அம்பாறை மாவட்டத் தலைவர் துசானந்தன் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன்போது கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டு குறித்த ஊர்திப் பவணியை ஆரம்பித்து வைத்தனர். தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டி, இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச நீதி, அரசியல் கைதிகளின் விடுதலை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு, பௌத்த சிங்கள மயமாக்கலை நிறுத்த போன்ற தமிழர்களின் அபிலாசைகளை முன்வைத்து திலீபன் வழியில் வருகின்றோம் என்ற தொனிப்பொருளில் மேற்படி ஊர்திப் பவணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பொத்துவில்லில் ஆரம்பிக்கப்பட்ட இப்பவனியானது வடக்கு கிழக்கு மாகாணங்கள் தழுவிய ரீதியில் அனைத்து மாவட்டங்கள் ஊடாகவும் பயணித்து இறுதியில் யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள திலீபன் நினைவுத் தூபி வரை சென்று நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெருகலம்பதி சித்திரவேலாயுதர் சுவாமி தீர்தோற்சவம்





**க.ருத்திரன்**

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் சின்னக்கதிர்காமம் எனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றதும் மூர்த்தி,தலம்,தீர்த்தம் என முறையாக அமையப் பெற்றதுமான வெருகலம்பதி அருள் மிகு கெஜாவல்லி, மஹாவல்லி சமேத ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தின் தீர்தோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை (16) பக்த அடியவர்களின் அரோகரா கோஷத்துடன் மகாவலி கங்கையின் கிளையாறான வெருகல் கங்கையில் இடம்பெற்றது.

நாட்டின் பல பாகத்தில் இருந்தும் பக்தர்கள் ஆலயம் வந்து வெருகலம்பதியான் திருவருளை பெற்று தீர்த்தோற்சவத்தில் கலந்து கொண்டனர். கடந்த 29.08.2022 ஆம் திகதியன்று ஆலயத்தில் கொடியேற்றம் நடைபெற்று தொடர்ந்து 18 தினங்கள் திருவிழா இடம்பெற்று இன்று அதிகாலை தீமிதிப்பு வைபவமும் நடைபெற்று புனித கங்கையில் தீர்த்தோற்சவமும் நடைபெற்றது. திருவிழாக்கள் யாவும் மரபு வழி கங்காணமும் நிர்வாகமும் மஹோற்சவ பிரதம குரு பிரம்மஸ்ரீ பா.தினேஸ்வர குருக்கள் வாமதேவ சிவச்சாரியார் மற்றும் வெருகலம்பதி ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ச.சிவகுமார குருக்கள் ஆகியோரால் நடாத்தப்பட்டது.

இம்முறை அதிகளவான பக்தர்கள் என்றும் இல்லாதவாறு ஆலயத்திற்கு சமூகமளித்திருந்தனர்.கடந்த 2 வருடகாலமாக நாட்டில் ஏற்பட்ட கொரோனா நோய் தாக்கம் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே வழிபாடு நடாத்துவதற்கு சுகாதரா பிரிவினர் அனுமதி வழங்கியிருந்தனர். இதேபோல் பாதயாத்திரைகள் மேற்கொள்வதும் சுகாதார பிரிவினரினால் தடை செய்யப்பட்டிருந்தது.இம்முறை அதிகளவான பக்தர்கள் அரோகரா கோஷத்துடன் சிறுவர் முதல் முதியவர் வரை யாத்திரையில் பங்கு கொண்டிருந்தனர். மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த யாத்திரை குழுவினரினால் பாதயாத்திரைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அடியவர்களுக்கு அன்னதானம் வழங்குவதில் சமூக ஆர்வலர்கள் பலர் ஆர்வம் காட்டியமை குறிப்பிடத்தக்கதாகும்.



# பழைய விலையில் பதுக்கி வைக்கப்பட்ட பால்மா பறிமுதல்



(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பழைய விலையில் உள்ள பால்மாக்களை பதுக்கி வைத்திருந்த வர்த்தக நிலையம் முற்றுகையிடப்பட்டு பால்மாக்களும் கைப்பற்றப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் ஆர்.எப்.அன்வர் சதாத் தெரிவித்தார். பரிசோதனை நடவடிக்கையானது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனின் ஆலோசனைக்கமைய மட்டக்களப்பு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் ஆர்.எப்.அன்வர் சதாத் தலைமையில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் சகிதம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளிற்கமைய கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் வாழைச்சேனை பிரதேசத்தை அண்டிய பிறைந்துரைச்சேனை மாவடிச்சேனை பகுதிகளிலுள்ள வியாபார நிலையங்களில் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில் சில்லறை வியாபார நிலையமொன்றில் 540.00 ரூபா 790.00 ரூபா ஆகிய பழைய விலையில் பதுக்கி வைக்கப்பட்ட 400 கிராம் பால்மாக்கல் பறிமுதல் செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டதுடன், பால்மாக்கள் புதிய விலையான 1160 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதுடன், குறித்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராக வழக்குத்தாக்களும் செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் ஆர்.எப்.அன்வர் சதாத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக வியாபார நிலையங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் நடைபெறுவதுடன், அரிசியை கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்வதையும், பொருட்களை பதுக்கி வைத்து விற்பனை செய்பவர்களையும் பிடித்து சட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் ஆர்.எப்.அன்வர் சதாத் தெரிவித்தார்.

# திருகோணமலையில் சுற்றுப்புறச்சூழல் சுத்திகரிப்பும் டெங்கு ஒழிப்பும்



(அ . அச்சுதன்)

திருகோணமலை பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தின் 200 ஆவது ஆண்டை நோக்கிய பயணத்தில், பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் “சுற்றுப்புறச்சூழல் சுத்திகரிப்பும் டெங்கு ஒழிப்பும்” எனும் தொனிப்பொருளில் நேற்று திருகோணமலை கோட்டை வாசல் அருகில் உள்ள கடற்கரையை சுத்திகரிக்கும் நிகழ்வு ஒன்று நடைபெற்றது. அதில் சிறப்பு அதிதியாக திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் சி.ஸ்ரீதரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்,மேலும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்க செயலாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் நலன்விரும்பிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.




# வாழ்வாதாரத்திற்கு உயிர் அச்சுறுத்தி வந்த முதலை பிடிபட்டது

(ரக்ஸனா)

இலங்கையின் இரண்டாவது மிகப் பெரிய வாவியாகக் கருதப்படும் மட்டக்களப்பு வாவியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட வந்தவர்களுக்கு பெரும் உயிர் அச்சுறுத்தலாக இருந்த முதலை வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் பிடிக்கப்பட்டு குமண காட்டுப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மட்டக்களப்பு வாவியின் பெரியகல்லாறு, மற்றும் கோட்டைக்கல்லாறு பகுதியில் அதிகளவு மக்கள் மீன்பிடித் தொழிலை நம்பியே தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் அக்குறித்த ஆற்றுப்பகுதியில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக முதலைகள் காணப்படுவதாக அப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இவ்வாறு தமக்கு அச்சுறுத்தலாக உள்ள முதலைகளைப் பிடிக்குமாறு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தும், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் அப்பகுதி உறுப்பினர் த.சுதாகரணிடம் மீனவர்கள் கோரிக்கை விடுத்ததற்கு இணங்க அவர் எடுத்த முயற்சியின் பலகாக வியாழக்கிழமை(15) இரவு குறித்த ஆற்றுப் பகுதிக்க வந்த வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகஸ்த்தர்கள் மிகவும் சூட்சுமமான முறையில் அச்சுறுத்திய முதலையைப் பிடிப்பதற்கு இரும்புக் கூடு வைத்துள்ளனர். இந்நிலையில் வைத்த கூட்டுக்குள் அகப்பட்ட குறித்த முதலையை வெள்ளிக்கிழமை(16) ஆற்றுக்குள்ளிருந்து வெளியில் கொண்டு வந்துள்ளனர்.



இவ்வாறு பிடிக்கப்பட்ட முதலையை குமண காட்டுப்பகுதிக்குக் கொண்டு சென்று விடவுள்ளதாக அத்திணைக்கள உத்தியோகஸ்த்தர்கள் தெரிவித்தனர். முதலைக் கடிக்கு இலக்காகி மூன்று பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள், எனினும் தமது வாழ்வாதாரத்திற்கு அச்சுறுத்தலாக இருந்த ஒரு முதலை தற்போது பிடிக்கப்பட்டுள்ளது. இன்னும் ஒரு முதலை உள்ளது. அதனையும் பிடித்துக் கொண்டு செல்லப்படும் பட்சத்திலேயேதான் தாம் சுதந்திரமாக மட்டக்களப்பு வாவியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடலாம் என அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மீனவர்களும், அப்பகுதிமக்களும் விடுத்த வேண்டுகோளிற்கு இணங்க தமது கட்சியின செயலாளர் பூ.பிரசாந்தன் அவர்கள் ஊடக கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றதையடுத்து மிக விரைவாக வன ஜீவராசிகள் திணைக்களத்தினர், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை, பொதுமக்கள், மீனவர்கள், உள்ளிட்ட பலரினதும் ஒத்துழைப்புடன், இந்த முதலை பிடிக்கப்பட்டுள்ளது. அதுபோன்று மற்றைய முதலையையும் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இதன்போது மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினர் த.சுதாகரன் இதன்போது தெரிவிதார்.

# தெய்வமானார் திராய்மடுச் சித்தர் சடையப்பர் சுவாமிகள்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

நல்லதம்பி என்னும் இயற்பெயர் கொண்ட சித்தர் சடையப்பர் சுவாமிகள் 1909 ஆம் ஆண்டு ஆடி அமாவாசை தினத்தன்று மட்டக்களப்பு மாவட்டத்திற்குட்பட்ட மட்டிக்கழி என்னும் கிராமத்தில் அவதரித்தார். வாலிபப்பருவமடைந்ததும் அன்னார் திருமண பந்தத்தில் இணைந்துகொண்டபோதும் துரதிர்ஷ்டவசமாக சற்றும் எதிர்பாராத வகையில் உண்டான அதிர்ச்சிச் சம்பவம் ஒன்று அன்னாரின் துறவு வாழ்க்கைக்கு திருப்புமுனையாக அமைந்தது.

மனமாற்றமடைந்த அன்னார் இல்லறத்தை விட்டுவிட்டு துறவறத்தை மேற்கொண்டு மட்டக்களப்பு முகத்துவாரத்தை அண்டிய திராய்மடு எனும் ஒரு காட்டுப்பகுதிக்கு1950.04.13 அன்று வருகை தந்தார். அக் காட்டுப்பகுதியை வெளியாக்கித் துப்பரவு செய்து தனக்கென்றொரு குடிசையை அமைத்து அதன் அருகில் நின்ற வேப்ப மரத்தடியில் முருகன் படம் ஒன்றையும் வைத்து வழிபட்டு வாழ்ந்துவரும்போது முருகப் பெருமானின் பேரருளால் அவர் தலையில் சடாமுடி தோன்றியது. அது வளர்ந்து வளர்ந்து 13 அடியையுந் தாண்டியது. அதனால் அன்னாருக்குச் சடையப்பர் என்ற பெயர் உண்டாயிற்று. பகலில் சடையைத் தலையிற் சுற்றிக் கட்டியிருப்பதும் இரவில் துயிலும் வேளையில் அதை அவிழ்த்துவிடுவதும் அவரது வழக்கமாகும். நாயன்மார்களில் ஒருவரான பூசலார் நாயனாரைப் போல் தேகமெங்கும் திருநீற்றை அள்ளிப்பூசியிருப்பதனால் அன்னாரை ஊடவ்ழத்துப் பூசலார் என்று கூடப் பேசிப் பெருமைப்படுபவர்களும் உள்ளனர். உருத்திராக்கக் காய் ஒன்றையும் கழுத்தில் கட்டித் தொங்கவிட்டிருப்பார்.

வேட்டியை முறைப்படியன்றி இடுப்பைச் சுற்றிச் சொருகிக்கட்டியிருப்பார்ஊபவ் வெள்ளைத் துணியால் மார்பைப் போர்த்தியிருப்பார் கண்களைச் சுருக்கி கலகலவென்று சிரித்து அனைவரையும் கவர்ந்திடுவார். குடிசையாக இருந்த அன்னாரின் இருப்பிடம் அடியார்களின் ஆதரவால் ஒரு ஆச்சிரமமாக விஸ்தரிக்கப்பட்டது. அன்னாரின் காலத்திலேயே முருகன் ஆலயமும் கல்லால் கட்டப்பட்டு கும்பாபிஷேகமும் நடந்தேறியது. ஆலயத்திற்கு வருகை தரும் அடியார்கள் முருகப் பெருமானை வழிபட்ட பின்னர் சுவாமிகளின் பாதங்களில் விழுந்து வணங்கி ஆசி பெற்றுச் செல்வது வழக்கம். முருகப் பெருமானால் சுவாமிகளுக்கு பல சோதனைகளும் அவற்றால் வேதனைகளும் ஏற்பட்டன. அவை அன்னாரைப் புடம்போட்டன. மனம் தளராது அவற்றை எதிர்கொண்டு அவற்றை சாதனைகளாக்கி கொண்டார். சுவாமிகள் செய்து காண்பித்த அற்புதங்கள் அடியார்களை ஆச்சரியப்படும்படி செய்துவிட்டன. வாய்பேசாத சிறுவனை பேசவைத்தமை அவற்றில் ஒன்றாகும். ஒரு சிறந்த தீர்க்கதரிசியுமாய் இருந்த சுவாமிகள் இப்பிரதேசம் ஒரு பிரசித்தி பெற்ற நகரமாகும் என்று அன்று திருவாய்மொழிந்திருந்தார். இன்று அது பலித்து ஆலய வளாகத்தைச் சுற்றி வீடுகளும் அரச கட்டிடங்களும் பாதைகளும் அமைக்கப்பட்டு சன நடமாட்டமுள்ள ஒரு நகரமாக இப்பிரதேசம் திகழ்வதை அனைவரும் கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது.



சுவாமிகளுடைய சமாதி தினம் அண்மித்ததாற் போலும் கொடு நோய் அன்னாரை ஆக்கிரமித்தது. முதுமையும் சேர்ந்து மேலும் துன்பத்திற்குள்ளாக்கியது. இதனால் 1992.09.24 அன்று 83ஆவது அகவையில் அன்னாரின் தெய்வீக ஆன்மா முருகப்பெருமானின் திருவடி நிழலைச் சென்றடைந்தது. ஏற்கெனவே சுவாமிகள் வேண்டிக் கொண்டதற்கிணங்க அன்னாரின் பொன்னுடல் அவர் துயிலும் இடத்திலேயே மறுநாள் (1992-09-25) முறைப்படி கிரியைகளுடன் சமாதியில் வைக்கப்பட்டது. முருகப் பெருமானுக்குப் பூசைகள் முடிவுற்றதும் சுவாமிகளின் சமாதியிலும் பூசைகள் நடைபெறுகின்றன. அவரும் தெய்வமானார். 83 ஆண்டுகள் இப்பூவுலகில் வாழ்ந்து அவற்றில் 42 ஆண்டுகள் ஆன்மிகப் பணியாற்றிய திராய்மடுச் சித்தர் சடையப்பர் சுவாமிகளின் புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும்.

# நூல்கள் வழங்கி வைப்பு



சர்வதேச தகவல்கள் உரிமை தினத்தினை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத் தினால் திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு சர்வதேச உரிமைகள் தினம் தொடர்பான நூல்களை பாடசாலை அதிபர் முகம்மட் சாலியிடம் இன்று(16) வழங்கி வைக்கப்பட்டது. பாடசாலை மாணவர்களின் நலன்கருதி ஒரு தொகுதி நூல்களை திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் அமதுரு அமரஜீவவினால் உத்தியோகபூர்வமாக பாடசாலையில் வைத்து கையளிக்கப்பட்டது. இதன் போது ஊடகாவியலாளர் ஒன்றியத்தின் உபதலைவர் லக்மால் கே பதுகே மற்றும் ஊடகவியலாளரும் கலந்து கொண்டார்கள்.

# "இலங்கையில் 74 வருடங்களாக தமிழருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை"

## அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன்

**( வி.ரி.சகாதேவராஜா)**

கடந்த 74 வருடங்களாக இலங்கை தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டு வந்த அநீதி தொடர்பாக இந்த புதிய வரைவில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை. புதிய வரைபு பலத்த ஏமாற்றத்தை அளிக்கிறது.இது கண்துடைப்பே. என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே. கோடீஸ்வரன் ஜெனீவாவில் வைத்து தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், கடந்த காலங்களில் கொண்டுவரப்பட்ட 46ஃ1 என்ற பிரேரண தீர்மானமாக நிறைவேற்றப்படும் அது கூட இந்த புதிய வரைவில் உள்வாங்கப்படவில்லை. தமிழின படுகொலைக்கு நீதி வழங்கும் ஒரு அம்சம் கூட இடம் பெறவில்லை.

ஒட்டுமொத்த தமிழினம் எதிர்பார்த்த வரைபை இம்முறை ஐநா சபை முன் வைக்கவில்லை என்பது கவலை அளிக்கிறது. சர்வதேச பொறிமுறை மூலம் தமிழருக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்து வந்தது . அது தொடர்பாக இங்கு எதுவுமே குறிப்பிடப்படாதது ஏமாற்றத்தை அளிக்கிறது . அது மாத்திரம் அல்ல சிறுபான்மை என்ற பதம்




புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் என்று அங்கு குறிப்பிடப்படவில்லை என்பது இன்னும் ஏமாற்றமாக இருக்கின்றது. ஒட்டுமொத்தமாக இது **75%** தமிழ் மக்களுக்கு ஏமாற்றமான ஒரு வரைவாகவே நான் பார்க்கின்றேன்

# தமிழ் மக்களை ஏமாற்றிய வரைவு இது

## ஜெனிவாவில் மட்டுமாநகர மேயர் சரவணபவன் சீற்றம்

**( வி.ரி.சகாதேவராஜா)**

2009 முள்ளிவாய்க்காலில் போர் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ் மக்கள் ஐநா மூலம் சர்வதேச ரீதியாக ஒரு தீர்வு கிடைக்கும் என்று நம்பி இருந்தார்கள் .ஆனால் தற்பொழுது சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற முதல் வரைவிலே தமிழ் மக்களுக்கு மிகுந்த ஏமாற்றம் கிடைத்திருக்கின்றது. இவ்வாறு ஜெனீவாவில் இருக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார் . முதல் வரைவு தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்..



கடந்த காலங்களில் முன்னேற்றகரமாக **31/1 46 /1** என்ற பிரேரணைகள் ஐநாவில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

இலங்கை அரசாங்கம் அவை தொடர்பாக கடந்த 12 வருட காலமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது தொடர்பாக ஐநாவும் போதுமான அழுத்தம் கொடுத்ததா என்பது கூட கேள்வியாக இருக்கின்றது. இம்முறை 46/1 என்ற பிரேரணை கூட அங்கு குறிப்பிடப்படாதது வேதனை அளிக்கிறது. தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு தொடர்பான விடயம் குறிப்பிடப்படவில்லை. மாறாக சிறுபான்மை என்ற புதிய பதம் புதிதாக புகுத்தப்படுகின்றது.

இலங்கையில் மூன்று சிறுபான்மையினங்கள் இருக்கின்றன. ஆனால் தமிழ் மக்களுக்கு நடந்த அநீதி கொடுமை இனப்படுகொலை என்பது எந்த இனத்திற்கும் இடம் பெறவில்லை.

எனவே அது தொடர்பாக ஒரு நீதியான விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை எடுபடவில்லை. இருந்த பொழுதிலும் ஊழல் விசாரணை செய்தோரை தேடி கண்டுபிடித்து அவர்களுக்கு தக்க தண்டனை வழங்குவது வெளிநாடுகளில் அடாத்தாக சொத்து சேர்த்து வைத்திருக்கின்றமை என்பதெல்லாம் நல்ல விடயமாக இருக்கின்றது. இந்த பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளக்கூடியன. இருந்த பொழுதிலும் வரலாற்றில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான தீர்வு பற்றிய பரிந்துரை இங்கே குறிப்பிடப்படாதது ஏமாற்றத்தை அளிக்கின்றது.

# ஐநாவின் முதல் வரைவு ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கு ஏமாற்றமாகவே அமைகிறது

## களத்தில் நின்று கணேஷ் காட்டம்

**(வி.ரி.சகாதேவராஜா)**

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை முன்வைத்த பிரேரணையின் முதல்வரைபு ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கு ஏமாற்றமாகவே அமைந்திருக்கின்றது. இவ்வாறு ஜெனீவாவில் இருக்கும் மாணவர் மீட்பு பேரவை தலைவரும், மனித உரிமை செயற்பாட்டாளருமான பொறியியலாளர் கலாநிதி செல்வராசா கணேஷ் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,பாதிக்கப்பட்டதமிழ்மக்களுக்கு ஐநா மூலமாக தீர்வு கிடைக்கும் என்ற பெரு நம்பிக்கை மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மனித உரிமை அமைப்புகளுக்கு பரவலாக இருந்தது. தமிழ் மக்கள் மீது இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த மனித உரிமை மீறல்கள் அநீதி பாரபட்சம் புறக்கணிப்பு போன்றவற்றிற்கு நீதி கிடைக்கும் என்று எதிர்பார்த்து இருந்தனர்.



ஆனால் அந்த எதிர்பார்ப்புகளுக்கு மாறாக இந்த வரைவு அமைந்திருப்பது கவலை அளிக்கின்றது. தமிழ் மக்களுக்கான தீர்வு என்பதற்கு பதிலாக புதிதாக சமகால பொருளாதார நெருக்கடி பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது .அது மட்டுமல்ல அந்த நெருக்கடிக்கு யார் காரணம் அவரை கண்டறிந்து விசாரித்து உரிய தண்டனை வழங்க வேண்டும் என்ற ஒரு நல்ல விடயமும் சொல்லப்பட்டிருக்கின்றது . போர்க்குற்றம் என்ற நிலை மாறி பொருளாதார நெருக்கடிக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. மேலும் அரசாங்கத்தால் அல்லது இராணுவத்தாலா மேற்கொள்ளப்பட்ட குற்றங்களை தனி நபர் குற்றமாக எடுத்துக்காட்ட முயற்சிக்கின்றார்கள். ஒட்டுமொத்த அரசாங்கம் அல்லது ராணுவம் செய்த படுகொலை போர்க்களத்துக்கு தனிநபர் அல்லது ஒரு ராணுவ வீரர்கள் வழக்கு தொடர முடியும் என்ற ரீதியிலே கூறுகிறது.

அந்த வரைபு என்பது ஒட்டுமொத்தமாக இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக இருக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அது இடம்பெற இல்லை. பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பது கட்டாயம் .அது தொடர்பாக சர்வதேசம் ஏற்றுக்கொள்கின்ற நாகரிகமான சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

மேலும் அரசியல் சார்பற்ற நிறுவனங்களுக்கான கெடுபிடி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மேலும் உள்ளூரில் நிதி மோசடி செய்து வெளிநாடுகளில் அதனை பதுக்கி வைத்திருப்பவர்கள் சர்வதேச வங்கிகளில் வைத்திருப்பவர்கள் வங்கி கணக்குகளை முடக்கும் பரிந்துரை ஒரு முன்னேற்றகரமாக இருக்கின்றது.

ஒட்டுமொத்தமாக பார்க்கின்ற பொழுது எம்மை வைத்து மேற்குலகம் இலங்கை அரசை கையாளுகின்றபோக்கு இது என் என்று எண்ணத் தோன்றுகின்றது. எது எப்படி இருந்தாலும் நாங்கள் களத்தில் நின்று கூடுதலாக அழுத்தத்தை கொடுக்க இருக்கின்றோம். என்றார்.

# உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு



**ஹஸ்பர்**

பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக பாதிக்கப்பட்ட வருமானம் குறைந்த தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. தம்பலகாமம் பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட பயனாளிகளுக்காக இன்று (16) பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க குறித்த உலர் உணவுப் பொதிகள் ஹியூமெடிகா லஙாகா நிறுவனத்தின் ஊடாக வழங்கப்பட்டன. இதில் சுமார் 22 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட பொதியில் அத்தியவசிய பொருட்களை உள்ளடக்கியுள்ளது. இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன்,பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் மஹிந்த வனசிங்க, பொதுச் சுகாதார பரிசோதகர்கள்,பெண்கள் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# சட்டவிரோத மின்சாரத்தை நீண்ட காலமாக பெற்று வந்த மூவருக்கு பிணை

**பாறுக் ஷிஹான்**

சட்டவிரோத மின்சாரத்தை நீண்டகாலமாக பெற்று வந்த மூவர் கைதாகி பிணையில் செல்ல கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளில் நீண்டகாலமாக மின்சார மின்மானியில் நுட்பமாக மாற்றம் செய்து சட்டவிரோதமாக மின்சாரத்தை பெற்று வந்த மூவர் அடையாளம் காணப்பட்டு கொழும்பில் இருந்து வந்த மின்சார சபை புலனாய்வு பிரிவினரால் கைது வியாழக்கிழமை(15) மாலை கைது செய்யப்பட்டிருந்தனர்.

பின்னர் கைதான மூவரும் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு சான்று பொருளான மின்மானியுடன் இன்று(16) கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன் போது குறித்த சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் மூவரையும் தலா 1 இலட்சம் ரூபா சரீரப்பிணையில் நீதிவான் விடுவித்ததுடன் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 28 ஆந்திகதி வரை வழக்கு மறுதவணை இடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இச்சட்ட விரோத செயல்பாட்டில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டவர் பள்ளிவாசல் ஒன்றின் நிர்வாகியாக செயற்பட்டு வருபவர் என்பதும் குறிப்பிடத்கதத்து.

# மட்டக்களப்பு மாவட்ட தமிழ்மொழி தின போட்டி











மட்டக்களப்பு மாவட்ட தமிழ்மொழி தின போட்டியின் பிரதான நிகழ்வு மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலுள்ள நாவற்காடு நாமகள் வித்தியாலய தேசிய பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் தருமரெத்தினம் அனந்தரூபன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஐந்து வலயங்களையும் சேர்ந்த பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், நடுவர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். தமிழ் பண்பாட்டு கலாசார வாத்தியங்கள் இசைத்து அதிதிகளுக்கு மலர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

அதனைத்தொடர்ந்து இறைவணக்கம், தமிழ் மொழி வாழ்த்து, வலய கீதம் என்பன இசைக்கப்பட்டதையடுத்து மாணவர்களின் வரவேற்பு நடனத்துடன், நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டதனைத் தொடர்ந்து தமிழ் மொழி தினப் போட்டிகள் நடுவர்களுக்கான அறிவுறுத்தலின் பின்னர் போட்டிகள் ஆரம்பமாகி இடம்பெற்றுள்ளது. மாவட்டத்தின் ஐந்து வலயங்களுக்குள்ளும் நடைபெற்ற போட்டி முடிவுகளின் அடிப்படையில் மட்டக்களப்பு வலயம் முதலிடத்தையும், மட்டக்களப்பு மேற்கு, பட்டிருப்பு வலயங்கள் இரண்டாம் இடத்தினையும், கல்குடா வலயம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாவற்கொடிச்சேனையில் திறன் வகுப்பறை திறந்து வைப்பு





மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாவற்கொடிச்சேனை பாடசாலையில் இன்று(16) வெள்ளிக்கிழமை திறன் வகுப்பறை திறந்து வைக்கப்பட்டது. இதனை மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம் திறந்து வைத்தார்.

நிகழ்வில் மட்டக்களப்பு மேற்கு உதவிக்கல்விப் பணிப்பாளர் ஜீவானந்தராசா, அதிபர், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களும் கலந்து கொண்டிருந்தனர். சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பு, ரத்னம் பவுண்டேன் ஆகிய அமைப்புக்களின் நிதியுதவின் கீழ் குறித்த திறன் வகுப்பறைக்கான நவீன சாதனங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன்போது ஸ்மாட் பலகையைப் பயன்படுத்தி ஆசிரியர் கற்பித்துக்காட்டினார். மாணவர்களும் குறித்த ஸ்மாட் பலகையை பயன்படுத்தியிருந்தமையும் எடுத்துக்காட்டத்தக்கது.

# புவனேஸ்வரியின் திடீர் மறைவு கல்முனை தமிழ் சமூகத்திற்கு பேரிழப்பாகும்

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

சிறந்த சமூக சேவகராக திகழ்ந்த மாநகர சபை உறுப்பினர் கே.புவனேஸ்வரியின் திடீர் மறைவானது எமது மாநகர சபைக்கும் கல்முனை வாழ் தமிழ் மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என்று கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.



கல்முனை மாநகர சபை உறுப்பினர் கே.புவனேஸ்வரி கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், வியாழக்கிழமை (15) இரவு காலமானார். அவரது மறைவு குறித்து வெளியிட்டுள்ள அனுதாப செய்தியில் முதல்வர் றகீப் மேலும் தெரிவித்திருப்பதாவது, எமது சபை உறுப்பினர் புவனேஸ்வரி உடல் நலம் தேறி மீண்டு வருவார் என்று எதிர்பார்த்திருந்த நிலையில், பேரிடியாக வந்த மரண செய்தியினால் அதிர்ச்சியும் துயரமுமடைந்துள்ளேன். கடந்த 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் நியமன உறுப்பினராக நியமிக்கப்பட்ட புவனேஸ்வரி அவர்கள், அப்பதவியின் ஊடாக மிகவும் பொறுப்புணர்வுடன் தான் சார்ந்த சமூகத்திற்கும் பாண்டிருப்பு பிரதேசத்திற்கும் அளப்பரிய சேவையாற்றியிருக்கிறார்.

அன்னாரது மறைந்த கணவர் துரை என்று அழைக்கப்பட்ட அமரர் விநாயகமூர்த்தியும் ஒரு சிறந்த அரசியல்வாதியாக, சமூக சேவகராக செயற்பட்டதன் காரணமாக அவரது பக்க துணையுடன் நிறைய சமூக சேவைகளை புவனேஸ்வரி முன்னெடுத்திருந்தார். பாண்டிருப்பு பிரதேசத்தில் பல வீதிகளை புனரமைப்பு செய்திருப்பதுடன் அங்கு முதன் முறையாக காபர்ட் வீதி அபிவிருத்தித் திட்டத்தையும் புவனேஸ்வரியே மேற்கொண்டிருந்தார். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் நகர திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சராக பதவி வகித்த ரவூப் ஹக்கீமின் ஊடாக பல கோடி ரூபா நிதியொதுக்கீட்டில் பாண்டிருப்பு பிரதேசத்தில் காபர்ட் வீதி உட்பட மைதானம், மையவாடி போன்றவற்றை குறுகிய காலத்தில் அபிவிருத்தி செய்திருந்தார். சமூக சேவையாற்றுவதில் எப்போதுமே அவர் கூடிய கரிசனை காட்டி வந்துள்ளார்.

இவ்வாறு மக்கள் பணியில் துடிப்புடன் ஈடுபட்டு வந்த நிலையிலேயே அவர் திடீரென நோய்வாய்ப்பட்டு, இறந்துள்ளார். இதனால் இன்று சிறந்த சமூக சேவகரை கல்முனை மண் இழந்திருக்கிறது. இவரது திடீர் மறைவு கல்முனை வாழ் தமிழ் மக்களுக்கும் எமது மாநகர சபைக்கும் குறிப்பாக முதல்வராகிய எனக்கும் பேரிழப்பாக அமைந்திருக்கிறது. புவனேஸ்வரி அவர்கள் எமது மாநகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இருந்து வந்தபோதிலும் எனது மாநகர ஆட்சி நிர்வாகத்திற்கு என்றும் பக்கபலமாக இருந்து வந்திருக்கிறார். மிகவும் கஷ்டமான தருணங்களில் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கி வந்திருக்கிறார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூட்டுப்பொறுப்பை மீறும் செயற்பாடுகளில் அவர் ஈடுபட்டிருக்கவில்லை.

எல்லோருடனும் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் பழகி வந்த புவனேஸ்வரி அவர்கள் ஓர் அமைதியான பெண் ஆளுமையாகத் திகழ்ந்தார். இறைவன் நாட்டப்படி குறுகிய காலத்தினுள் அவர் எம்மை விட்டும் பிரிந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடையட்டும். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மாநகர சபையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்– என்று குறிப்பிட்டுள்ளார்.

# மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் 22வது நினைவேந்தல் நிகழ்வு



**(றியாஸ் இஸ்மாயில்)**

"அன்னாருக்காய் பிரார்த்திப்போம், அவர் வழியில் பயணிப்போம்" எனும் தொனிப்பொருளில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் 22வது நினைவேந்தல் நிகழ்வு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச்சேனை மத்திய குழுவின் ஏற்பாட்டில் நேற்று(16.09.2022) காலை 6.30 மணியளவில் அட்டாளைச்சேனை பெரிய ஜு/ம்ஆ பள்ளிவாசல் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அட்டாளைச்சேனை மத்திய குழுவின் தலைவர் எஸ். எல்.ஏ.ஹலீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் பற்றி விசேட உரை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் பொதுச் செயலாளர் மௌலவி யூ.எம்.நியாஸின் நெறிப்படுத்தலின் மூலம் கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் மாணவர்களினால் யாசின் ஓதி தமாம் செய்யப்பட்டன.

இதன் போது கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி எம்.ஐ.எம்.அஷ்ரபினால் விசேட துஆப் பிரார்த்தனை நிகழ்த்தப்பட்டது. அன்னாருக்காய் பிரார்த்திப்போம், அவர் வழியில் பயணிப்போம் எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும், உயர் பீட உறுப்பினருமான எம்.எஸ்.உதுமாலெப்பை,ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர்,ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர் யூ.எம். வாஹிட், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவித் தவிசாளர் எஸ்.எம்.எம்.ஹனீபா, பிரதேச சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம்.உவைஸ், டாக்டர் கே.எல்.எம். நக்பர், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாலமுனை, ஒலுவில் பிரதேச அமைப்பாளர்கள், அதிபர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# "தலைவர் தின" நிகழ்வு கல்முனையில்



**நூருல் /ஹுதா உமர், சர்ஜுன் லாபீர்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரஃப்பின் 22 வது நினைவு தினத்தை முன்னிட்டு நினைவுப் பேருரையும் கத்தமுல் குர்ஆனும்துஆப் பிரார்த்தனையும் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் கல்முனைக் காரியாலயத்தில் இன்று (16) வெள்ளிக்கிழமை காலை 08. 00 மணியளவில் நடைபெற்றது. முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் ஏற்பாட்டில் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.சி.ஏ. சத்தார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி ஏ.எம்.றக்கிப், கல்முனை மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி ரோஷன் அக்தர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். மேலும் கட்சியின் முக்கியஸ்தர்கள், உலமாக்கள், ஹாபிழ்கள், கட்சியின் போராளிகள் என பலரும் கலந்து கொண்டு மறைந்த தலைவரின் மறுமை வாழ்வின் ஈடேற்றத்திற்காக விசேட துஆப் பிரார்த்தனை செய்தனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவர் எச். எம்.எம்.ஹரீஸ் அவர்களின் காரியாலயமானது கடந்த 30 வருடங்களாக மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச். எம். அஷ்ரஃப்பின் காலத்திலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கல்முனை பிராந்திய காரியாலயமாக இயங்கிவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# இணைந்த கரங்களினால் விளையாட்டு, கல்வி மேம்பாட்டு உதவிகள் வழங்கி வைப்பு



**(சுமன்)**

இணைந்த கரங்கள் அமைப்பினால் இன்றைய தினம் பல்வேறு இடங்களில் விளையாட்டு மற்றும் கல்வி மேம்பாட்டுக்கான உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. அம்மாறை மாவட்டம் அட்டப்பளம் விளையாட்டுக்கழகம் மற்றும் மல்வத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றில் மேற்படி உதவித் திட்டங்கள் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர் லோ.கஜரூபன் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டன. அட்டப்பளம் ஜொலி ஸ்டார் வினையாட்டுக் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க கழக உறுப்பினர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் முகமாக பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மல்வத்தை விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவர்களின்கல்விமேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு பெறுமதி வாய்ந்த கற்றல் உபகரணங்கள் மற்றும் அப்பியாச கொப்பிகள், புத்தகப் பைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. மாணவர்களுக்கான புத்தகப் பைகளுக்கான நிதிப்பங்களிப்பினை இணைந்த கரங்கள் அமைப்பின் ஆர்வலர் சுஜிதரன் வழங்கி இருந்தார்.

அத்துடன் மேற்படி பாடசாலையின் பெயர் பலகையில்லாத குறையினை நிவர்த்தி செய்யும் வகையில் இணைந்த கரங்கள் அமைப்பின் ஆர்வலரான கண்ணன்வேலு அவர்களின் நிதிப்பங்களிப்பில் பெயர்ப்பலகை அமைத்துக் கொடுக்கப்பட்டு இன்றைய தினம் அப்பெயர்ப்பலகை திறந்து வைக்கப்பட்டது. இப்பாடசாலை நிகழ்வில் கோட்டக்கல்வி அதிகாரி எம்.ஏ.சபூர் தம்பி, ஆசிரிய ஆலோசகர் பாடசாலை மேம்பாட்டு இணைப்பாளர் எம்.ஏ.எம். ரசீத் பாடசாலையின் அதிபர் எஸ்.கிருபைராஜா, இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான சேதுநாதபிள்ளை, ரிஸ்வான், தஜன், காந்தன் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# 25% இளைஞர் பிரதிநிதித்துவ ஒதுக்கீட்டினை உள்ளீர்த்தல்



ஐவய இளைஞர் ஊடக அமைப்பின் பிரதிநிதி முஹமட் நஸ்ரான் நேற்றைய தினம் முன்னாள் ஜனாதிபதி திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்தித்து, சகல தேர்தல்களிலும் 25% இளைஞர் பிரதிநிதித்துவ ஒதுக்கீட்டினை உள்ளீர்த்தல் மற்றும் நாட்டின் சமகால நெருக்கடி நிலை குறித்து கலந்துரையாடினார். சர்வதேச இளைஞர் தினத்தையொட்டி, "ஐவய இளைஞர் ஊடக அமைப்பு" **25%** இளைஞர் பிரதிநிதித்துவத்தை வழங்குவது குறித்து, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள்,இளைஞர் அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளிடமிருந்து கருத்துக்களைப் பெற்று ஆவணமாக்கல் செயற்பாட்டில் ஈடுபட்டது. குறித்த ஆவணமாக்கல் தொடர்பான இறுதி அறிக்கை மற்றும் பிரேரணையின் தற்போதைய நிலை குறித்த அறிக்கை இன்று முன்னாள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

# நாவிதன்வெளியில் பயனாளிகளுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைப்பு



**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இஸ்லாமிக் ரிலீஃப் அரச சார்பற்ற நிறுவனத்தால் வாழ்வாதார உதவி திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு கட்டமாக பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எஸ் ரங்கநாதன் வழிகாட்டலில் இன்று (16.09.2022) பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ். சிபாயாவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலக நிர்வாக அதிகாரி கே. யோகேஸ்வரன் அதிதியாக கலந்து கொண்டார்.

சுயதொழில் ஊக்குவிப்பு வேலை திட்டத்தின் கீழ் இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு சுமார் 80,000 ரூபா பெறுமதியான சுயதொழில் உதவி திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் கோவிட் –19 மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இந்த பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கும் வேலை திட்டத்தின் கீழ் 10 ,000 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் இங்கு வழங்கப்பட்டன.

இஸ்லாமிக் ரிலீஃப் நிறுவனத்தின் சிரேஸ்ட் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.எச்.சுபுஹான், திட்ட உத்தியோகத்தர் ரி.ரமேஸ், உளவளத்துணை ஆலோசகர் ஏ. சுதர்சன் உட்பட மகளிர் அபிவிருத்தி பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் , பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.